**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.12 of 2021

Deposition of P.W. 3

Name of the Witness: திரு.பாலசுப்பிரமணியம்

Date : 15.10.2025

**முதல் விசாரணை தொடர்ச்சி**

2) காசோலை எண்கள் 404034 மற்றும் 404035 வெண்ணிலா டிரேடர்ஸ் உரிமையாளர் ராஜசேகர் பெயரில் எங்கள் வங்கியால் வழங்கப்பட்டது. அந்த இரண்டு காசோலைகளும் பி.கே.பவுன்ராஜ் கணக்கில் பணமாக்கப்படவில்லை. பி.கே.பி.புட் மில்ஸ் பிரவேட் லிமிடெட் கணக்கிற்கு அந்த காசோலைக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் பி.கே.பி.பவுன்ராஜின் தனிப்பட்ட கணக்கு எண் 605705014943 ஐசிஐ வங்கிக்கு அந்த காசோலைக்கான பணம் செலுத்தப்படவில்லை. பி.கே.பி.புட் மில்ஸ் பிரவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு காசோலைக்கான பணம் 8.4.2020 அன்று பெறப்பட்டுள்ளது. மேற்படி காசோலைகள் 24.03.2020இருந்தோ அல்லது மார்ச் மாதமோ காசோலைகள் பணமாக்கப்படவில்லை. அந்த காசோலைகள் யாருக்கு பணம் செலுத்தப்பட்டது என்பதற்கான அறிக்கை **Ex.X1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

சம்மனில் குறிப்பிட்டுள்ள இரண்டு காசோலைகளும் RTGS மூலமாக பி.கே.பி.புட் மில்ஸ் பிரவேட் லிமிடெட்டுக்கு பணமாக்கப்பட்டுள்ளது.

RTGS பணம் பரிமாற்றம் செய்யவேண்டும் என்றால் அதற்குண்டான படிவத்தில் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த RTGS படிவத்தை நான் எடுத்து வரவில்லை. அந்த RTGS படிவத்தை எங்கள்தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி விடுவோம். அந்த RTGS படிவத்தை பார்க்காமல் யார் பூர்த்தி செய்தார்கள் என்று சொல்லமுடியாது. அந்த காசோலைகளை எடுத்து வரவில்லை, அதை பார்க்காமல் யார் பூர்த்தி செய்தார்கள் என்று என்றால் என்னால் முடியாது. அந்த காசோலைகள் எங்கள் வங்கியில் தலைமை அலுவலகத்தில் இருக்கும். எங்களின் ஆவணங்கள் படி பி.கே.பி.புட் மில்ஸ் பிரவேட் லிமிடெட்டுக்கு பணமாக்கப்பட்டுள்ளது. ஐசிஐ வங்கி கணக்கிற்கு பணமாக்கப்படவில்லை. பி.கே.பி.புட் மில்ஸ் பிரவேட் லிமிடெட் எங்கள் வங்கியில் கணக்கு இல்லை. அதனால் அதன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது.